**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.02
https://ngmtamil.in/

# ஐங்குறுநூற்றில் மருதத்திணையில் பெண்களின் நிலை: ஓர் இலக்கிய-சமூகவியல் பகுப்பாய்வு

**சூ.ஜோஸ்பின் மாலதி,** உதவிப்பேராசிரியர், முதுகலை தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
Email: josephinemalathi@vvvcollege.org, ORCID No: https://orcid.org/0000-0001-8576-965X

**ஆய்வுச்சுருக்கம்**

ஒழுக்கத்திற்கும், அறிவுடையவர்களுக்கும் மதிப்பளித்த சங்க இலக்கியங்கள் இந்திய இலக்கியங்களில் தனித்தன்மை பெற்றது. அத்தகைய சங்க இலக்கியமான எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியன தமிழ்ச் சமூக மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன. சங்ககால மக்களின் அன்றாட வாழ்க்கையையும், வாழ்க்கைத் தத்துவத்தையும், நிலைபெற்ற உண்மைகளையும் மன்னன் முதல் சாதாரண குடிமக்களின் வாழ்க்கை வரையிலுமாக எடுத்துக்காட்டாகக் கூடியதாகவும் இவ்விலக்கியங்கள் அமைந்துள்ளது. சங்ககால மக்களின் நிலை, பழக்கவழக்கங்கள், வாணிபம் ஆகியவற்றை அறிந்துகொள்ள இவ்விலக்கியங்கள் பேருதவி புரிகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நில அமைப்பிற்கு ஏற்ப அக்காலத்து மக்களின் வாழ்க்கை ஐந்து விதமாக அமைந்திருந்தன. இம்மக்கள் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய பண்டமாற்று முறையினைக் கையாண்டனர்.

**முன்னுரை**

சங்கம் நிறுவித் தமிழை ஆராய்ந்த காலம் சங்ககாலம் எனப்படுகிறது. இக்காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது. சங்ககாலத் தமிழ் சமூகம் அறவழியில் வாழ்தலையே வாழ்வின் நோக்கமாகக் கருதியது. இத்தகைய அறவுணர்வு மன்னர், மக்கள், அறிஞர் முதலிய பல தரத்தினரிடமும் உள்ளுணர்வாக ஊடுருவி காலத்தைப் பொற்காலம் ஆக்கியது.

**திறவுச்சொற்கள்**

அரசியல் முறை, போர்முறை, திணைச் சமுதாயம், கல்விமுறை, இசைக்கலை, இடையர், வேடர்

**சங்ககால அரசியல் முறை**

சங்ககால மன்னர்கள் அறவழிப்பட்ட அரசியலைப் போற்றினர். குடிமக்களை குழந்தையை ஈன்ற தாய் பேணுதலைப் போன்று காத்தனர். அவர்களது பழிப்புரைக்கு ஆளாவது சாதலைவிடக் கொடியது என்று அஞ்சினர். மன்னர்கள் அறநெறி சான்ற புலவர்கள், சான்றோர்கள் ஆகியோர்களின் அறிவுரைக்குச் செவி மடுத்து

வாழி ஆதன் வாழி அவினி / வேந்து பனை தணிக யாண்டு பலநந்துக/என வேட் டோளே யாயே நாமே"1

என்ற ஐங்குறுநூறு பாடல் வழியாகக் காண முடிகிறது. மன்னர்களின் பகை ஒழிந்து நீண்ட காலம் வாழ வேண்டும் என்று வேண்டுகின்றனர்.

**சங்ககாலப் போர்முறை**

பண்டைத் தமிழரின் அடிப்படையாகவும், அன்றாட நிகழ்ச்சிகளாகவும், அணிகளாகவும், வீரமும், போரும் விளங்கின. அறத்தை நிலைநாட்டும் பொருட்டுப் போர் புரிதல் என்னும் மறச்செயலில் ஈடுபட்டனர். இத்தகைய வீரனின் கடமையினைக் குறித்து பொன்முடியார் பட்டியலிடுகிறார்.

"ஈன்று புறம்தருதல் என்தலைக் கடனே / சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே / வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே /தண்ணடை நல்கல் வேந்தற்குக் கறடனே / ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்/களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"2

போர் அன்றாட வாழ்வியலில் இணைந்திருந்தது. மார்பில் காயம் வீரத்தின் சான்றாகக் கருதினர். முதுகில் காயம் கோழைத்தனத்தின் சான்றிதழாக்கி நாணி உயிர் நீத்தனர். போருக்குப் புறப்படும்போது வெற்றிக் கனவில் ஆரவாரம் செய்தனர். கொம்பு, சங்கு, முரசு பெரும்பறை முதலியன ஒலிக்கப்பட்டன.

**சங்ககாலத் திணைச் சமுதாயம்**

தமிழ்ச் சமுதாயம் தனிச்சமுதாய அமைப்பிலிருந்தது. அதுவே திணைச் சமுதாய அமைப்பாகும். திணைகள் ஐந்து. எனினும் நிலையான் திணைகள் நாலு, நிலம் நாலும் திணைகள் சமூக வாழ்வின் இயற்கைப் பின்னணிகள். மனித உழைப்பிற்கு இடமளித்த களங்கள். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்பட்டன. இதனைத் தமிழின் தென்மை காத்த இலக்கண பேராசான் தொல்காப்பியன்

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் / சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"3

திணைச் சமுதாயத்திற்கு நால் வகை நிலமும், இயற்கைப் பின்னணியும், நிலவளமும் இன்ன பிறவுமே களமதைத்துத் தந்தது எனலாம்.

**மகளிர் நிலை**

மனித வாழ்வை மையமாக வைத்து வந்த சங்ககாலச் சமுதாயத்தில் ஆடவருக்கு வீரமும் பெண்களுக்குக் கற்பும் நட்பாதரவும் அணிகளாக விளங்கின. இதனை, "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்று இலக்கியம் படுவதினால், மகளிர் குடும்பத்திலும், சமுதாயத்திலும் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தனர் என்று கொள்ளுதல் கூடாது. தலைமக்கள் இருவருக்கும் இடையேயான அன்பின் நெருக்கம் பற்றிய விளக்கது"4 என்பதாக அறியலாம். கலையிலும், கல்வியிலும் தேர்ச்சி பெற்று ஆடவர்களைப் போன்று உயர்ந்த நிலையை அடைதல், இல்லத்தரசியாக இருந்து விருந்தோம்புதல், தவறும் கணவனைக் கண்டித்தல், பொழுது போக்கிலும், விளையாட்டுக்களிலும் கலந்து கொள்ளுதல் போன்ற உரிமைகளைப் பெற்றிருந்தனர். சங்ககாலத்துப் பெண்கள் சங்ககால தமிழகத்தில் பெண்கள் கல்வியில் ஏற்றம் பெற்றிருந்தனர் என்பதை ஔவையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு பொன்முடியார், பாரி மகளிர் போன்றவர்களின் மூலம் அறியலாம். அதியமானுக்கும், தொண்டைமானுக்கும் இடையே நிகழ இருந்த போரை ஔவையாரின் சொல்வன்மை தடுத்து நிறுத்தியது. அரசியல் துறையில் மகளிர் தூது செல்லும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதற்கு இந்நிகழ்வு சான்றாகும்.

**சங்ககாலத்துக் கல்வி முறை**

ஆணும், பெண்ணும் புலமை பெற்றிருந்தனர். எண்ணியல், வானியல் ஆகியன வளம் பெற்றிருந்த காலமது. சங்ககாலத் தமிழகத்தில் இனப்பாகுபாடு, பொருளியல் பாகுபாடின்றி கல்வி யாவருக்கும் பொதுவுடைமை ஆக்கப்பட்டிருந்தது. மன்னர்களும், குடிமக்களும் கல்வி கற்பதில் பேரார்வம் செலுத்தினர். கல்வியறிவு பெற்றவன் உயர்ந்த இனத்திற்கு இணையாக மதிக்கப்பட்டதை,

"உற்றழி உதவியும் உறுப்பொருள் கொடுத்தும் / பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"5

எனும் புறநானூற்று வரிகள் மூலம் அறியலாம். மன்னர்கள் புலவர்களின் அறிவுரைகளைக் கேட்டு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தினர். மன்னர்கள் கல்விக்காக செய்த செயல்களுள் சிறந்தது தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழாய்ந்தது ஆகும்.

**சங்ககாலத்துக் கலைகளுள் இசைக்கலை**

சங்ககால மக்கள் இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். எல்லா உயிர்களையும், இசையச் செய்வதால் இசை எனப் பெயரிட்டனர். தொண்டையாலும், கருவிகளின் துணையாலும் இசைத்தனர். சங்ககாலத்தில் திணைதோறும் தனித்தனிப் பண்புகளும், பறைகளும், யாழ்களும் உரிதாக்கப்பட்டுள்ளன. இதனை,

"பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென / நால்வகை யாழா நாற்பெரும் யண்ணே"

என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. இது குறித்து,

"இசைக்கலையின் வளர்ச்சியையும், இசைக் கலைஞர்களின் திறனையும் மக்களின் அழகு நாட்டத்தையும் விளக்குகின்றன"7 என வே.தி. செல்லம் புலப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

**சங்ககால மணமுறைகள்**

மணமுறைகள் காதல் மணம், கற்பு மணம் என்ற நிலையில் ஏற்பட்டது. காதல் மணம் - களவு மணம் எனப்பட்டது. அதனைச் சமூக ஒழுக்கமாகக் கொண்டதால் களவொழுக்கம் என்றனர். களவொழுக்கத்தில் காதலர்கள் முன் கூடலில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் உண்டு. இவ்வாறு கூடிய பின் காதலியைக் கைவிட்ட நிலையுண்டு. எனவே தான் தொல்காப்பியர்,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் / ஐயர் யாத்தனர் காணம் என்ப"7

என்று மண நடைமுறையின் தோற்றம் குறித்துத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகின்றார்.

**பொருளாதார வாழ்க்கை**

சங்ககாலச் சமூகமானது அமைதியாகவும், வளமாகவும் இருந்ததால் பொருளியல் வளர்ச்சியானது சிறப்பாகக் காணப்பட்டது. உழவு, நெசவு, பிற கைத்தொழில்கள், வாணிகம் எனப் பல வகையிலும் தொழில்கள் சிறந்து விளங்கின. போரில் பெறுகின்ற புகழைவிட மக்களின் தொழில் வளத்தைப் பெருக்கிய எய்துகிற புகழே நிலைத்தது என மன்னர்கள் நம்பினர். இதனால் பொருளாதார வாழ்க்கை வளமுடையதாயிற்று.

**பண்டமாற்றுதல்**

மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலானப் பொருட்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்றம் செய்தனர். பண்டாற்றம் என்பது தன்னிடம் உள்ள பொருளை வேண்டியவர்க்கு கொடுத்து தனக்கு வேண்டும் பொருளை அதற்குப் பதிலாக அவரிடம் இருந்து வாங்குவதாகும். அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினர். நகரங்களில் வாழ்ந்த மக்கள் காக் கொடுத்து பொருளை வாங்கும் முறை

இருந்தாலும் கிராமங்களிலும், ஊர்களிலும் பண்டமாற்றும் முறையே இருந்தன. தமிழகத்தில் மட்டும் இல்லாமல் உலகில் எல்லா நாடுகளிலும் ஆரம்பகாலத்தில் இப்பண்டமாற்று முறை இருந்துள்ளன. இதனைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். 7

**இடையர்**

இடையர் என்பவர் முல்லைநில மக்கள். இவர்களது தொழில் ஆடு, மாடு மேய்த்தல் ஆகும். பால், மோர், தயிர், நெய் போன்ற பொருட்களை விற்று அவர்களுக்குத் தேவையான தானியங்களை வாங்கிக் கொண்டனர்.

பாலொடு வந்து கூழொடு பெயரும் / ஆடுடை இடைமகன்" (குறுந்: 221)

என்னும் முதுகொற்றனார் பாடல் மூலம் அறியலாம். இதில் கூழ் என்பது உணவு ஆகும். அதாவது உணவுக்குத் தேவையான தானியங்கள் என எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஆய மகளிர் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சினார்கள். தயிரையும் மோரையும் தானியத்திற்கு மாற்றி உணவு சமைத்து உண்டனர் என்பதைக் கூடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"நள்ளிருள் விடியல் புள்ளெழப் போகிப் / புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி /ஆம்பி வாள்முகை யன்ன கூம்புமுகிழ் / உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து / புகர் வாய்க் குழிசி பூஞ்சுமபகு இரீஇ / நாள் மோர் மாறும் நன்மா மேனிச் / சிறுகுழை துயல்வரும் காதிர் பணைத்தோள் / குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள் / அளவிலை உணவில் கிளையுடன் அருந்து" (பெரும்பாண். 155-163)

என்று கூறுகிறார். ஆனால் இடைச்சியர் நெய்யை பண்டமாற்று செய்யாமல் காசுக்கு விற்றனர்.

**வேடர்**

வேடன் தான் வேட்டையாடிக் கொண்டுவந்த மான் இறச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதைக் கோவூர்கிழார் கூறுகிறார். மேலும், இடைச்சியரும் உழவனுக்குத் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டனர். இதனை,

"கானுறை வாழ்க்கைக் கதறாய் வேட்டுவன் / மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள் / தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய / ஏரின் வாழ்நர் மோரில் அரிவையர் / குளக்கீர் விளைந்த களக்கோல் வெண்ணெல் / முகந்தகை கொடுப்ப உவந்துனர் பெயரும், / தென்னம் பொருப்பின் நன்னாடு" (புறம்: 33:1-8)

என்பதால் அறியலாம்.

**மீனும் தானியமும்**

பாணர் நீர்நிலைகளில் வலை வீசியும் தூண்டில் போட்டும் மீன் பிடித்தார்கள். அவர்கள் பிடித்த மீன்களைப் பாணர் மனைவியர் ஊரில் கொண்டு போய் தானியத்துக்கு மாற்றினார்கள் என்பதை,

''முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த / அகன் பெரு வட்டி நிறைய மனையோள் / அரிகால் பெரும்பயறு நிறைக்கும்" (ஐங்குறு. மருதம், புலவிப்பத்து, 47)

என ஓரம்போகியார் பாடலால் அறியலாம். மேலும், கடற்கரை ஓரத்திலே நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர் கடலிலே சென்று சுறா, இறால் முதலான மீன்களைப் பிடித்து வந்தார்கள் என்றும் அதனைப் பரதவ மகளிர் தானியத்துக்கு மாற்றியதை,

"இனிது பெறு பெருமீன் எளிதினிற் மாறி" (நற். 239: 3)

எனும் குற்றியனார் பாடலால் அறியலாம்.

**உப்புக்கு நெல்லை மாற்றுதல்**

கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நில மக்கள் உப்பு விளைவித்தார்கள். உப்பு வாணிகர்கள் மாட்டு வண்டிகளில் நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டுபோனார்கள் என்பதை நற்றிணை மூலம் அறியலாம்.

"தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து / பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"

என்பதாகும்.

**மது அருந்துதல்**

சங்க காலத்தில் மது அருந்துவதற்கும் பண்டமாற்றம் செய்யப்பட்டது. நெய்தல் நிலத்து மக்கள் கடலிலே கிடைத்த முத்துச் சிப்பிகளைக் கள்ளுக் கடையில் மாற்றி கள் குடித்ததை அகநானூறு கூறுகிறது. இதனை,

"பன்மீன் கொள்பவர் முகந்த சிப்பி / நாரரி நறவின் மகிழ்றொடைக் கூட்டும் / பேரிசைக் கொற்கை" (அகம் 296:8-10)

என்பதால் அறியலாம். மேலும் பொருள் இல்லாமல் மது அருந்திவிட்டுப் பிறகு பொருள் தருவதாகக் கூறிய நிகழ்வுகளும் சங்ககாலத்தில் நிகழ்ந்துள்ளன.

"அரிகினர் பணைத்தோள் வயிறணி திதிலை / அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பின / மகிழ் நொடை பெறாஅர் ஆகி நனைகவுள் /கானயானை வெண்கோடு சுட்டி / மன்றொடு புதல்வன் புன்றலை நீவும்/அருமுனைப் பாக்கம்" (அகம். 345;8-13)

எயினர் மது அருந்துவதற்காக மது விற்கும் இடத்திற்கு வந்து எந்தப் பொருளும் இல்லாமல், காட்டில் யானைகளை வேட்டையாடி தந்தங்களைத் தருவோம் எனக் கூறி மது அருந்திய நிகழ்வு இப்பாடலில் உள்ளன.

**முடிவுரை**

சங்ககால குடிமக்கள் அறப்பண்புகளைக் கடைபிடித்து வாழ்ந்தனர். அறத்தின் மீது முழு நம்பிக்கையினைக் கொண்டு சமூகத்தினை நிலைநிறுத்தினர். மனிதனின் இயல்பான உணர்ச்சிகளும், செயல்களும் வாழ்வியல் முறையில் வெளிப்பட்டன. ஒழுக்கத்தையும், மனிதநேயத்தையும் மக்கள் பின்பற்றி சங்ககாலத்தினை பொற்காலமாகத் திகழச் செய்தனர். இவற்றிலிருந்து சங்ககாலத்தில் பண்டமாற்று வாணிகம் நடந்ததை அறிகிறோம். ஆனால் பண்டமாற்று வாணிகம் நடந்த அக்காலத்தில் காசு வழங்கப்படவில்லை என்று கருதுவது கூடாது. அதே காலத்தில் செம்பு, வெள்ளி, பொன் காசுகளும் வணிக வழக்கில் இருந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1]. ஐங்குறுநூறு, பா. 124.
[2]. புறநானூறு.
[3]. தொல்காப்பியம், அகத்திணை, நூ. 5.
[4]. பெ.சுயம்பு, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 28.
[5]. புறநானூறு, பா. 183.
[6]. வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், ப. 131.
[7]. 7 தொல்காப்பியம், கற்பியல், 4.

**முரண்பாட்டு அறிக்கை**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ அல்லது அது சார்ந்த தரவுகளிலோ எவ்வித நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட நலன் முரண்பாடுகளும் இல்லை என ஆசிரியர் இதன் மூலம் அறிவிக்கிறார்.